# உணவில் அயோடின் கலந்த உப்பு சேர்த்தால் தைராய்டு கட்டி வராது

## கோவை மெடிக்கல் சென்டர் டாக்டர் ராஜ்குமார் தகவல்

கோவை,மே.11: தினசரி சாப்பிடும் உணவில் அயோடின் கலந்த உப்பை சேர்த்தால் தைராய்டு கட்டி பிரச்னை வராது என கோவை மெடிக்கல் சென்டர் மருத் துவமனை பொது மற்றும் லேப்ரா ஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.எஸ்.ராஜ்குமார் கூறியதாவது:


டாக்டர் ராஜ்குமார்

மனித உடலில் தைராய்டு என்பது மிக முக்கிய உறுப்பு. தைராய்டு சுரப்பிகளால் வரும் ஹார்மோன் உடம்பில் எல்லா உறுப்புக்களையும் கட்டுப்படுத்துகிறது. கழுத்து பகுதியில் வீங்கி கட்டியாக இருந்தால் தைராய்டு சம்பந் தப்பட்ட கட்டியாக இருக்கலாம். தைராய்டு சுரப்பி குறைவாகவோ அல்லது அதிகமாகவோ சுரந்தால், கட்டுப்படுத்தும் உறுப்பு க்களை பாதிக்கும். கட்டி இருந்தால் டாக்டரை அணுகி அது கேன்சர் சம்பந்தப்பட்ட கட்டியா என்பதை பரிசோ தனை மூலம் அறிந்து கொள் ளலாம். ஒரு வேளை புற்றுநோய் சம்பந்தபட்ட கட்டியாக இருந்தால் ஆரம்ப த்திலேயே கண்டு பிடித்து அறுவை சிகிச்சைசெய்யலாம். எனவே கழுத்து பகுதியில் கட்டி இருந்தால் உடனடியாக டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும். இது தவிர ரத்தபரிசோதனை மூலம் சுரப்பி அதி கமாக அல்லது குறைவாக சுரக்கிறதா என்பதை அறியலாம். அப்படி குறைவாக இருந்தால் மாத்திரை மூலம் குணப்ப டுத்தலாம். கட்டி இருந்தால் ஆபரேசன் மூலம் அகற்றலாம்.

சுரப்பி சம்பந்தப்பட்ட அயோடின் கலந்த உணவை உட்கொள்ளாததால் சுரப்பி குறைவாக சுரக்க வாய்ப்பு ள்ளது. அதனால் தைராய்டு வீக்கம் வருகிறது. தைராய்டு கட்டி பரம்ப ரையாகவும் வர வாய்ப்புள்ளது. பிறந்த குழந்தை முதல் அனைத்து வயதினருக்கும் தைராய்டு கட்டி வரவாய்ப்பு ள்ளது. குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் பாதிப்பு வரும்.

தைராய்டு குறைவாக சுரந்தால் பசி எடுக்காது. சரியாக உணவு சாப்பிட முடியாது. எடை அதிகரிக்கும். மலச்சிக்கல் ஏற்படும். பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் தொந்தரவு ஏற்ப டும். உடலில் சோர்வு ஏற்படும். தைராய்டு அதிகமாக சுரந்தால் அதிக பசி எடுக்கும். ஆனால் உடல் எடை குறையும். அதிகமாக உடலில் வேர்வை கொட்டினால் நெஞ்சு படபடக்கும்.

எனவே தினசரி சாப்பிடும் உணவில் அயோடின் கலந்த உப்பை சேர்த்தால் தைராய்டு சுரப்பி பிரச்னை வராது. கல் உப்பில் அயோடின் கலந்து இருக்காது. தைராய்டு கட்டி இருந்தால் ரத்த பரிசோதனை, ஸ்கேன் மற்றும் பயாப்சின் என்ற பரிசோதனை செய்ய வேண்டும். இப்பரிசோத னையின் மூலம் எந்த மாதிரியான கட்டி என்பதை தெரிந்து கொள்ளலாம். அதற்கு தகுந்தாற் போல அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். ஒரு வேளை புற்றுநோய் கட்டியாக இருந்தால் கட்டியை அகற்றிய பிறகு 'நியூக்ளியர் மெடிசன்' துறை மூலம் அயோடின் தெரப்பி சிகிச்சை அளிக்க வேண்டும். இந்த சிகிச்சை முறை கோவை மெடிக்கல் சென்டரில் அளிக்கப்படுகிறது.

தைராய்டு அறுவை சிகிச்சை முக்கியமான அறுவை சிகிச்சையாகும். சரியான முறையில் ஆபரே சன் செய்யாவிட்டால் பேசும் போது குரலில் பாதிப்பு ஏற்படும். தைராய்டு கட்டி இருந்தால் ஆரம்ப கட் டத்திலேயே மருத்துவரிடம் பரிசோதிக்க தவறினால், அது புற்றுநோய் கட்டியாக இரு க்கும் பட்சத்தில் புற்றுநோய் உடல் முழுவதும் பரவி உயிருக்கு ஆபத்தை ஏற்படு த்தும். இவ்வாறு டாக்டர் ர ராஜ்குமார் கூறினார்.